செ.வெ.எண்: 22 நாள்: 13.05.2022

# செய்தி வெளியீடு

## மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், கரூர் மாவட்டம்

### பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் கல்வி விடுதிகளில் காலியாக உள்ள பகுதிநேர தூய்மைப்பணியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு

கரூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் காலியாக உள்ள 8 (ஆண்–5, பெண்–3) பகுதிநேர தூய்மைப்பணியாளர்கள் பணியிடங்கள் ரூ.3000/– தொகுப்பூதியத்தில் நிரப்பப்படவுள்ளன. இதில் 5 ஆண் பகுதிநேர தூய்மைப்பணியாளர் காலிப்பணியிடங்களில் முன்னுரிமை பெற்றவர் அடிப்படையில் ஆதி திராவிடர் அருந்ததியர் வகுப்பில் 1 பணியிடமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பில் 1 பணியிடமும், முன்னுரிமையற்றவர் அடிப்படையில் பொதுப்பிரிவில் 1 பணியிடமும், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் (முஸ்லீம் தவிர) 1 பணியிடமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பில் 1 பணியிடமும் நிரப்பப்பட உள்ளன.

பெண் பகுதிநேர தூய்மைப்பணியாளர் 3 காலிப்பணியிடங்களில் முன்னுரிமை பெற்றவர் அடிப்படையில் பொதுப்பிரிவில் 1 பணியிடமும். மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பில் 1 பணியிடமும், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் (முஸ்லீம்கள் தவிர) 1 பணியிடமும் நிரப்பப்பட உள்ளன.

மேற்கண்ட பகுதிநேர தூய்மைப்பணியாளர் (ஆண்/பெண்) காலிப்பணியிடங்கள் நேர்காணல் மூலம், இனச்சுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
2. வயது வரம்பு: 1.7.2022 தேதியில் SC/ST - 18 முதல் 35, BC, BCM, MBC & DNC - 18 முதல் 32, இதர பிரிவினர் 18 முதல் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.

மேற்படி, தகுதிகளுடன் கரூர் மாவட்டத்திலுள்ள விடுதிகளில் பகுதிநேர தூய்மைப்பணியாளர் (தொகுப்பூதியம்) பணி புரிய விருப்பம் உள்ளவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் (காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை) பணி நாட்களில் விண்ணப்ப படிவம் பெற்று செய்து அதனை பூர்த்தி செய்து, உரிய சான்றுகளின் நகல் இணைத்தும், சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி அதனை சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் 30.05.2022 தேதிக்குள் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முகவரி தவறாக இருந்து, அழைப்பாணை திரும்ப பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் மீது அரசு பரிசீலிக்காது எனவும் மனுதாரரே முழுப்பொறுப்பு எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மனுதாரர்களை மேற்கண்ட தகுதியின் அடிப்படையில் விண்ணப்பம் செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.